இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

# போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு
# கொழும்பு புறநகர் ரயில் திட்டத்தின் திட்ட முகாமைத்துவப் பிரிவிலுள்ள திட்டப் பணிக்குழாம் வெற்றிடங்கள்

கொழும்பு புறநகர் ரயில் திட்டத்தின் திட்ட முகாமைத்துவப் பிரிவினால், ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உதவியின் கீழ் ரயில் வினைத்திறனை மேம்படுத்தும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. தற்போது, ரயில் அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்படும் பாரிய திட்டமொன்றாக, இலத்திரனியல்மயமாக்கல் உள்ளிட்ட ரயில் அபிவிருத்திப் பணிகளையும் உள்ளடக்கும் வகையில் திட்டத்தின் நோக்கெல்லை மாற்றியமைக்கப்பட்டு, திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இப்பணிகளை முன்னெடுப்பதற்குத் தற்போது அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், குறித்த பணிகள் இவ்வமைச்சும் இலங்கை ரயில்வே திணைக்களமும் இணைந்து நடைமுறைப்படுத்தி வருகின்றன.

கொழும்பு புறநகர் ரயில் திட்டத்தின் திட்ட முகாமைத்துவப் பிரிவிற்குத் தேவையான ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக, இலங்கை அரசாங்கத்தின் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 02/2026 ஆம் இலக்க சுற்றறிக்கையின் நிபந்தனைகளுக்கு அமைவாக, ஒப்பந்த அடிப்படையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடப் பதவிகளுக்கு தகுதியான இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

| இலக்கம் | பதவி | சம்பளக் குறியீடு | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பிரதி திட்டப் பணிப்பாளர் (கொள்முதல்) | B | 01 |
| 2. | உதவி திட்டப் பணிப்பாளர் (நிதி) | D | 01 |
| 3. | திட்ட செயலாளர் | F | 01 |

| சம்பள குறியீடு மற்றும் பதவிப் பெயர் | தேவையான அடிப்படைத் தகுதிகள் |
|---|---|
| **B**<br>பிரதி திட்டப் பணிப்பாளர் (கொள்முதல்) | கீழுள்ள தொடர் இலக்கம் 01,02 அல்லது 03 இல் ஒரு தகுதியைப் பெற்றிருத்தல்<br>01. தொடர்புடைய துறையில் இளமானிப் பட்டம்<br>மற்றும்<br>சம்பந்தப்பட்ட துறையில் பட்டப் பின்படிப்பு பட்டம் / சம்பந்தப்பட்ட துறையில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தில் இருந்து பெற்றுக்கொண்ட அதனையொத்த தொழிற் தகைமை<br>அத்துடன்<br>சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 11 வருட முகாமைத்துவ மட்ட சேவை அனுபவம், அவற்றில் 05 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டமாயிருத்தல் வேண்டும்.<br>02. சம்பந்தப்பட்ட துறையில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தில் இருந்து பெற்றுக்கொண்ட உறுப்புரிமை<br>அத்துடன்<br>ஆகக் குறைந்தது 9 வருட முகாமைத்துவ மட்ட அனுபவம், அவற்றில் 04 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டமாயிருத்தல் வேண்டும்.<br>03. அரசின் அகில இலங்கைச் சேவையில் வகுப்பு I அல்லது அதற்கு ஒத்த தகுதியைப் பெற்றிருத்தல்<br>மற்றும்<br>சம்பந்தப்பட்ட துறையில் பட்டப் பின்படிப்பு அல்லது ஒரு அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தில் இருந்து பெற்றுக்கொண்ட ஒரு இணை உறுப்புரிமை/ அதனையொத்த தொழிற் தகைமை<br>அத்துடன்<br>வகுப்பு I பதவியில் குறைந்தபட்சம் 4 வருட சேவை அனுபவம் அல்லது சம்பந்தப்பட்ட துறையில் அதனையொத்த தகைமை |

| | |
|---|---|
| ***D***<br>உதவி திட்டப் பணிப்பாளர்<br>*(நிதி)* | கீழுள்ள தொடர் இலக்கம் *01,02* அல்லது *3* இல் ஒரு தகுதியைப் பெற்றிருத்தல்<br>*01.* தொடர்புடைய துறையில் பட்டப்படிப்பு அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் தொடர்புடைய துறையில் பட்டப்படிப்பிற்கு சமமானதாக அங்கீகரிக்கப்பட்ட தகைமை.<br>மற்றும்<br>இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் நடத்தப்படும் *Licentiate II / Intermediate Examination / Certificate II in Accounting and Business Level Examination / Corporate Level Examination* அல்லது அதற்கு மேற்பட்ட பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அல்லது அத்துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றினால் வழங்கப்படும் அதற்கு இணையான தொழில்சார் தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும்.<br>மற்றும்<br>அத்தகைமையை பெற்றதன் பின்னர் குறித்த துறையில் குறைந்தது *07* ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல்.<br><br>02. சம்பந்தப்பட்ட துறையில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தில் இருந்து பெற்றுக்கொண்ட ஒரு இணை உறுப்புரிமை/ அதனையொத்த தொழிற் தகைமை<br>மற்றும்<br>குறித்த துறையில் குறைந்தது *04* ஆண்டுகள் அனுபவம்.<br><br>03. தொடர்புடைய துறையில் அரசின் அகில இலங்கைச் சேவையில் தரம் *II / III* அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பணிபுரியும் அதிகாரி அல்லது அதற்கு ஒத்த நிலைமையுடைய அதிகாரி.<br>மற்றும்<br>தொடர்புடைய துறையில் தரம் *II / III* பதவியில் அல்லது அதற்கு ஒத்த நிலைமையில் குறைந்தது *07* ஆண்டுகள் அனுபவம் |
| ***F***<br>திட்ட செயலாளர் | கீழுள்ள தொடர் இலக்கம் *01* அல்லது *02* இல் ஒரு தகுதியைப் பெற்றிருத்தல்<br><br>01. க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆறு *(6)* பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அவற்றில் ஆங்கிலம் மற்றும் சிங்களம்/தமிழ் மொழி உட்பட நான்கு *(4)* பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br>மற்றும்<br>க.பொ.த (உ/த) பரீட்சையில் (பொது அறிவுப் பாடம்) தவிர்ந்த மூன்று *(3)* பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>மற்றும்<br>அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் நடத்தப்படும் செயலாளர் பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது பட்டயச் செயலாளர் *(Chartered Secretary)* தகைமைக்கு வழிவகுக்கும் பரீட்சைகளுக்குத் தோற்றிவருதல் வேண்டும்.<br>மற்றும்<br>குறித்த துறையில் குறைந்தது *04* ஆண்டுகள் அனுபவம்.<br><br>02. *Chartered Secretary* தொழிற் தகைமையை பெற்றிருத்தல் மற்றும் குறித்த துறையில் குறைந்தது *04* ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல். |

<u>சம்பள வரம்பு</u>

*B – 370,000 – 390,000*
*D – 260,000 - 280,000*
*F – 160,000 – 175,000*

**<u>விசேட நிபந்தனைகள்</u>**

மேற்குறிப்பிட்ட *B* பிரிவிலுள்ள பதவிக்கான பின்வரும் விசேட தகுதிகள் மேலதிக தகுதிகளாகக் கருதப்படும்.

1. சர்வதேச நடைமுறைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொள்முதல் நடவடிக்கைகள் தொடர்பான அனுபவம்.

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

2. சர்வதேச ஒப்பந்த நிபந்தனைகளுடன் (FIDIC) மேற்கொள்ளப்பட்ட கொள்முதல் மற்றும் ஒப்பந்த முகாமைத்துவம் தொடர்பான சேவை அனுபவம்.
3. வெளிநாட்டு நிதியுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் கொள்முதல் நடவடிக்கைகள் தொடர்பான சேவை அனுபவம்.
4. தேசிய கொள்முதல் வழிகாட்டுதல்கள் மற்றும் கையேடு (2024) தொடர்பான அறிவும், அவற்றை நடைமுறையில் பயன்படுத்தியமை தொடர்பான சேவை அனுபவமும்.
5. ஆலோசனைச் சேவைகளுக்கான கொள்முதல் நடவடிக்கைகள் தொடர்பான சேவை அனுபவம்.

**பொதுவான நிபந்தனைகள்**

1. மேற்குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடப் பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் வயது 64 வயதிற்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.
2. அனைத்து நியமனம் பெறுபவர்களும் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து தமது கடமைகளை நிறைவேற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.
3. வெளிநாட்டு நிதியுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களில் பெற்றுள்ள சேவை அனுபவம் மேலதிக நன்மையாகக் கருதப்படும்.
4. ஆங்கில மொழித் தேர்ச்சி, அரசாங்க விதிமுறைகள் தொடர்பான அனுபவம் மற்றும் கணினி அறிவு ஆகியவை மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான அத்தியாவசிய முன்தகுதிகளாகும்.
5. அரச அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சட்டரீதியான சபைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களின் விண்ணப்பங்கள் தெரிவுசெய்யப்பட்டால், குறித்த வேட்பாளரை விடுவிக்க முடியுமா என்பதைத் தெளிவாகக் குறிப்பிடும் வகையில், சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.
6. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை இலக்கம் 02/2026 இற்கு அமைவாக, கொடுப்பனவுகளுடன் சம்பளம் வழங்கப்படும். ஊழியர் தனது மாதாந்த சம்பளத்தில் 8% ஐ ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்ய வேண்டும். அதேவேளை, தொழில் வழங்குநர் 12% ஐ ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், 3% ஐ ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்புச் செய்வார்.

**விண்ணப்பங்கள்**

7. தகுதியான விண்ணப்பதாரர்கள், சம்பந்தப்பட்ட பதவிகளுக்கான தமது பொருத்தம் / தகுதிகளை எடுத்துக்காட்டும் விண்ணப்பக் கடிதத்துடன், உறவினர்களல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் தொடர்புத் தகவல்களை உள்ளடக்கிய பூர்த்தி செய்யப்பட்ட சுயவிவரத்தையும், சம்பந்தப்பட்ட கல்வி, தொழில்சார் மற்றும் அனுபவச் சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளையும் இணைத்து விண்ணப்பங்களை அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அவ்வாறு சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள் தெரிவுசெய்வதற்காக கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.
8. விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பங்களை 2026 ஒக்டோபர் 22 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபால் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை தயவுசெய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

**தபால் முகவரி:-**

**திட்டப் பணிப்பாளர்,**
**திட்ட முகாமைத்துவ அலகு,**
**கொழும்பு புறநகர் ரயில் திட்டம்,**
**கொட்டா வீதி,**
**கொழும்பு 08.**

9. அதிகூடிய தகுதிகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் குறுகிய பட்டியலில் *(Shortlist)* தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். தெரிவு திறமையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

*செயலாளர்*
*போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு*
*07வது மாடி, செத்சிறிபாய கட்டம் II*
*பத்தரமுல்லை*
*2026 ஒக்டோபர் 08*

SINCE 2014
Gazette.lk
AMBITIONS REALIZED